## 121. உம் மேலே ஆச வந்திடுச்சே

### பல்லவி

உம் மேலே ஆச வந்திடுச்சி - இயேசய்யா
உம் மேலே நேசம் வந்திடுச்சி

### அனுபல்லவி

எனக்காக நீர்பட்ட பாடுகளை நினைத்தபோது
என் கண்ணில் கண்ணீர் வந்திடுச்சி

### சரணங்கள்

1. எனக்காக நீர் செய்த
நன்மைகளை நினைத்த போது
என்னுள்ளம் நன்றி பொங்கிடுச்சி - இயேசய்யா
- உம் மேலே

2. பாவியான என்னை மீட்க
உம் இரத்தம் சிந்தினீரே
என்று நான் நினைத்தபோது
என் நாவில் துதியும் வந்திடுச்சி - இயேசய்யா
- உம் மேலே

3. எனக்காக ஒரு ஸ்தலம்
ஆயத்தமாக்கி உள்ளீர்
என்று நான் நினைத்து போது
என் உள்ளம் ஆனந்தமாயிடுச்சி - இயேசய்யா
- உம் மேலே

4. உடைக்கப்பட்ட பாத்திரம் என்னை
ஒட்ட வைத்து பயன்படுத்தும்
என்று நான் நினைத்த போது
என் உள்ளம் உருகி போயிடிச்சி - இயேசய்யா
- உம் மேலே